விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 101 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 16 புதன்கிழமை (30.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நாடு முழுவதும் இன்று
## 10 மணி நேர மின்வெட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று பத்து மணி நேரம் மின் தடை நடைமுறைப் படுத்தப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

A,B,C,D,E,F,G,H,I,J,K,L ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணி முதல் 15

## நாட்டில் முதல் முறையாக
## 2 இலட்சத்தை கடந்த தங்கத்தின் விலை



(கொழும்பு)

நாட்டில் தங்கத்தின் விலை நேற்று 15 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 2 இலட்சம் ரூபாய் என வரலாற்றில் முதல் தடவையாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி நெகிழ்வான நிலைக்கு 15

## கோப்பாய் பொலிஸார் மீது தாக்குதல்
### நீதிமன்ற பிடிவிறாந்துடன் சென்றபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற பிடிவிறாந்தை நிறைவேற்ற சென்ற கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியை சேர்ந்த இருவருக்கு நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு செல்ல தவறியமையால் 15

## விலை மாற்றம்

**அன்பு வாசகர்களே!**

காகிதாதிகள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதன் காரணமாக 01.04.2022 இல் இருந்து உங்கள் **வலம்புரி** நாளிதழின் விலை 40/= ரூபாயாகவும் **சங்குநாதத்தின்** விலை (ஞாயிறு வாரமலர்) 50/= ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகின்றது.


எமக்கு அப்பாற்பட்ட நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ள இவ்விலை அதிகரிப்பை ஏற்று, வழமைபோல் உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாகம்
**வலம்புரி**

## 4 அத்துமீறிய இந்திய மீனவர்கள் கைது

(15 ஆம் பக்கம் பார்க்க)

### அரசுக்கு பெரும்பான்மை பலம் உண்டு
# தேசிய அரசு அமைக்கும் எண்ணம் இல்லை
### பிரதமரையும் மாற்றமாட்டோம்
### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசு பெரும்பான்மை பலத்துடன் இன்னும் இருக்கின்றது. தேசிய அரசு அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பிரதமரை மாற்றும் யோசனையும் எமக்கு இல்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு தகவல் வழங்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நல்லாட்சி தேசிய அரசால்தான் நாடு 15

## தமிழர் விவகாரத்தில் இனவாத கருத்தை தூண்ட வேண்டாம்
### சிங்கள தொலைக்காட்சி அறிவிப்பாளருக்கு கடும் சீற்றத்துடன் ரணில் பதில்



(கொழும்பு)

இனவாத கருத்துக்களை முன்வைப்பதற்கு முயன்ற சிங்கள தொலைக்காட்சியின் அறிவிப்பாளருக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடுமையான பதில்களை வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச 15

## அரசாங்கத்துக்கு எதிராக 150 போராட்டங்கள்
### ஒரே நாளில் நடத்த ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

(கொழும்பு)

ராஜபக்ச அரசுக்கு எதிராக ஒரே நாளில் ஒரே நேரத்தில் 150 போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. 15

## எரிவாயுவின் விலை தொடர்ந்து அதிகரிக்கும்
### இராஜாங்க அமைச்சர் லசந்த

(கொழும்பு)

எரிவாயு விலை தொடர்ந்தும் அதிகரிக்க உள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

லிட்ரோ எரிவாயுவின் விலையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் 15

## கோப்பாயில் வாள்வெட்டு
### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறை கும்பல் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் 15

### நாட்டின் இன்றைய தேவை
## ஜனாதிபதியை விலக்குவதல்ல நிதியமைச்சரை நீக்குவதே
### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய காலத்தின் தேவை ஜனாதிபதியை பதவி விலகுவதல்ல நிதியமைச்சரை நீக்குவதே என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேரலை விவாதம் ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞன் நேற்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞர் இரண்டு நாட்களின் பின்னர் கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்று மாலை மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவக்கிரி சனசமூக நிலையத்தடியில் நேற்று மாலை மீட்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர். (ம-33)






## வண்ணார்பண்ணையில் இரண்டு ஆலயங்களில் உண்டியல் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் உள்ள பிரபல இரண்டு ஆலயங்களில் உண்டியல் உடைத்து பணம் திருடியவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவங்கள் நேற்று முன் தினமிரவு இடம்பெற்ற நிலையில் சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் வெளிநாட்டு குற்றிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-33)


## பெயர் மாற்றம்

கேணியடி திருநெல்வேலி கிழக்கு, யாப்பாணத்தில் வசிக்கும் **தம்பு சர்வலோகேஸ்வரி** எனும் நான் எனது பெயரை இன்றில் இருந்து **தம்பு சர்வா** என பெயர் மாற்றம் செய்கிறேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடிமக்களுக்கு அறியத் தருகின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் **தம்பு சர்வா** எனும் பெயரையே பயன்படுத்துவேன்.

இப்படிக்கு
**தம்பு சர்வா**

(C-4093)

## யா/ இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் - 2022

காலம் : 02.04.2022
நேரம் : காலை 9.00 மணி
இடம் : சைவ மகாஜன மண்டபம் சரஸ்வதி கலையரங்கம்

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(C-4092)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால்
மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளைப் பாராட்டி
மேற்படி ஆச்சிரம முதல்வர்
**கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு**







அமெரிக்காவில் இயங்கிவரும் உலகத் தமிழ் பல்கலைக்கழகத்தால்
**"சமூக சேவைக்கான வாழ்நாள் சேவையாளர் விருது"**
சென்ற 26.03.2022 அன்று கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில்
வைத்து வழங்கப்பட்டது.





அவரது சமுதாயப் பணிகள்
தொடரவும் பல்லாண்டு வாழ
வேண்டுமென ஆற்றங்கரை
அமர்ந்து அருள் பாலிக்கும்
சந்நிதி வேலவனின் அருள்
வேண்டி வாழ்த்துகிறோம்.

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

(C-4091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஊழல் நிறைந்த அரசாங்கத்தை பிணை எடுக்க எத்தனிப்பதை நிறுத்துங்கள்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை கூட்டமைப்புக்கு அறிவுரை

(கொழும்பு)

**புலம்பெயர் தமிழர்களை வைத்து இலங்கையை பிணையெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாக அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை குற்றஞ்சாட்டியுள்ளது.**

இலங்கையில் முதலீடு செய்ய புலம்பெயர் மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில் புலம்பெயர் தமிழர்களுக்கும் - அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயற்பட தயார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே அரசை பிணையெடுக்க கூட்டமைப்பு முயல்வதாக அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் 2009 மே மாதம் முடிவடைந்த போதிலும், தமிழர்கள் நிலங்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பானது தொடர்கிறது. நாட்டின் பாதுகாப்புக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லாதபடியால் இலங்கையில் பாதுகாப்பு செலவினம் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதற்கு மாறாக, இலங்கையின் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதுடன், அரசாங்கச் செலவுகளில் 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் போரின் போது, 2009 இல் 100,000 சிப்பாய்கள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இது மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்குச் சொந்தமான வளமான காணிகளை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து, இராணுவ முகாம்கள் தமிழர் பிரதேசங்களில் வேரூன்றியுள்ளன. தமிழர் பிரதேசங்களில் நிலவும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் சிங்கள இராணுவம் கட்டுப்படுத்துகிறது.

இன்று இலங்கையில் கள்ளச்சந்தை, பணவீக்கம் மற்றும் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிய அரசியல் உரிமைகளை வழங்குவதை விட அவர்களின் வாழ்வாதரத்திற்காக போராட வைத்து அவர்களை வறுமையில் வைத்திருக்கிறது!

நீண்டகால தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு உண்மையாகவும் இதய சுத்தியுடனும் தீர்வு கண்டிருந்தால் இலங்கை தற்போதைய பாரதூரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்காது.

இந்தப் பின்னணியில், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தவொரு கணிசமான தீர்வையும் பெறாமல் இலங்கையின் ஊழல் நிறைந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் பிணை எடுப்பதைத் தவிர்க்குமாறு புலம்பெயர் அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கேட்டுக்கொள்கின்றன.

சிங்கள இனவாதிகளின் ஏழு தசாப்த கால போலித்தனமான வரலாற்று அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு உண்மையான நம்பகமான மூன்றாம் தரப்பினரின் பிரசன்னம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் எந்தவிதமான பேச்சுகளிலும் ஈடுபடமாட்டார்கள். 2002 சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அனுபவங்களின் அடிப்படையில், புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்னுமொரு "சமாதானப் பொறிக்குள்" விழத் தயாராக இல்லை! என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மருந்து தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்ட சத்திரசிகிச்சைகள்

## செய்தி அறிந்து உடனடியாக தலையிட்டது இந்தியா

(பேராதனை)

மருந்து தட்டுப்பாட்டால் பேராதனை போதனா மருத்துவமனையில் திட்டமிடப்பட்ட அனைத்து சத்திர சிகிச்சைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தியறிந்து கலங்கியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை தொடர்பு கொண்டு இந்த நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காண இந்தியா எவ்வாறு உதவ முடியும்? என உரிய தரப்பினருடன் ஆராயுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஓய்வு பெற மாட்டேன்

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் மகிந்த

(கொழும்பு)



பதவிக்காலம் முடியும் வரை தான் நாட்டின் பிரதமராக நீடிப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் உடனே ஓய்வுபெறப் போவதில்லை எனவும் அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக தேசிய அரசாங்கம் மற்றும் பிரதமர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவது போன்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மகிந்த இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பிரச்சினைகள் இருந்த போதிலும், அவற்றை விரைவில் தீர்க்க அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

எனது பதவிக்காலம் முடியும் வரை நான் நாட்டின் பிரதமராக நீடிப்பேன். அடுத்த தேர்தலிலும் நாங்கள் வெற்றி பெறுவோம்.

எனக்கு இன்னும் சிறிது காலம் இருக்கிறது. உடனே ஓய்வுபெற மாட்டேன். தேசிய அரசாங்கம் தொடர்பில் வெளியாகும் ஊகங்கள் அனைத்தும் வதந்தி.

தற்போதைய நெருக்கடிகளான பொருளாதாரம், மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் அனைத்தையும் அரசாங்கம் விரைவில் தீர்க்கும் என சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# உணவுப் பொருட்கள் அடங்கிய 1000 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில்

(கொழும்பு)




அரிசி, சீனி, பருப்பு, மிளகாய் ஆகிய பொருட்கள் அடங்கிய மேலும் ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அவற்றை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் நிஹால் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மேலதிக உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு டொலர் பற்றாக்குறை தடையாகவுள்ளதாகவும் எவ்வாறாயினும், போதியளவு உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# தென்னை மரம் வெட்டத் தடை

(கொழும்பு)

உரிய அனுமதியின்றி தென்னை மரம் வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவிக்கையில், "இலங்கை தேயிலை போல, இலங்கை தேங்காய்க்கும் சர்வதேச சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இது எமது பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக அமையும். தேயிலை தொழில்துறைக்கு நிகரான வருமானத்தை இதன் மூலமும் ஈட்ட முடியும்.

மரம் வெட்டுதல் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்குள் தென்னை மரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

எனவே, இனி கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளரின் அனுமதியின்றி தென்னை மரம் வெட்ட முடியாது.

அவ்வாறு வெட்டினால் பொலிஸாரால் கைதுசெய்ய முடியும்" என அவர் தெரிவித்தார். (நி)

# உலக சந்தையில் மீண்டும் குறைவடைந்தது எரிபொருள் விலை

(வோஷிங்டன்)

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான சமாதான பேச்சுவார்த்தை புதிய சுற்றில் ஆரம்பமாக உள்ளதாக தகவல் வெளியான பின்னர் உலக சந்தையின் கச்சாய் எண்ணெயின் விலை நேற்றுக் காலை மீண்டும் குறைந்துள்ளது.

அத்துடன் சீனாவின் நிதி கேந்திர நிலையமாக கருதப்படும் ஷாங்காய் நகரம் கொவிட் தொற்று அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்டுள்ளதை அடுத்து எரிபொருளுக்கான கேள்வி குறையும் என சீனா அச்சம் வெளியிட்டிருந்தது.


நேற்றுக் காலை வெளியிடப்பட்டுள்ள புதிய விலைகளுக்கு அமைய பிரேன்டி குறூட் சந்தையில் ஒரு பீப்பாய் கச்சாய் எண்ணெயின் விலை 109.97 டொலர்களாக இருந்தது.

இதற்கு முன்னர் அதிகாலையில் அதன் விலையானது 111.41 டொலர்களாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குத்துச்சண்டை போட்டி

# வவுனியா, முல்லையை சேர்ந்தோர் தங்கம் வென்று சாதனை



INTERNATIONAL BRAVE BOXING COUNCIL நடத்தும் சர்வதேச குத்துச்சண்டை போட்டி கடந்த 27 ஆம் திகதி மதுரவாயில் சென்னையில் இலங்கை மற்றும் இந்திய அணியினர்களுக்கிடையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இப்போட்டியில் இலங்கை அணி வீரர்கள் சார்பாக வவுனியா மாவட்டத்தை சேர்ந்த எஸ்.சிறீதர்சன், ரி.நாகராஜா ஆகிய இரண்டு வீரர்களும் முல்லைத்தீவை சேர்ந்த இ.கிருஸ்ணவேணி, வை.நிதர்சனா ஆகிய இரண்டு வீராங்கனைகளும் பங்குபற்றினர்.

குறித்த நான்கு மாணவர்களில் மூவர் தங்கப் பதக்கத்தையும் ஒருவர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

அந்த வகையில் போட்டியில் பங்கு பற்றிய முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கைவேலி மருதமடு பகுதி யில் வசிக்கும் யோகராசா நிதர்சனா என்ற தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் யுவதியும் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார். (4-285)

## கராத்தே போட்டியில்

# வவுனியா வீராங்கனைகள் வெற்றி



கராத்தே போட்டியில் வவுனியா வீராங்கனைகள் பதக்கங்களை பெற்று வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

நிப்பொன் கராத்தே சாம்பியன்ஷிப் - 2022 (NIPPON KARATE CHAMPIONSHIP - 2022) கராத்தே போட்டிகள் பண்டாரகமவிலுள்ள விளையாட்டுத் திடலில் கடந்த 27 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றுள்ளது. இப்போட்டிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தி வவுனியாவை சேர்ந்த மார்ட்டியல் ஆர்ட்ஸ் கழகத்தின் (DINESH MARTI ALARTS SCHOOL) வீராங்கனைகள் பங்குபற்றி பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்று வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவ் வீராங்கனைகளிற்கு ரி.பி.தினேஷ், ஜி.ஜீவன் ஆகியோர் பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டிகள்

2022 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

கிரிக்கெட், கபடி, மென்பந்து, கரப்பந்து, வலைப்பந்து ஆகிய போட்டிகள் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில் மேற்படி விளையாட்டுக்களில் கழகங்களின் ஆண், பெண் வீர, வீராங்கனைகள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். (4-6-18)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2546


### ஜானுஷா

பேசும் படம்




### லிதுர்சன்

அந்த காலத்துல Bat வாங்கி விளையாடுற அளவுக்கு காசு கிடைக்காது.. கேட்டாலும் வாங்கி தரமாட்டாங்க..



ஆனாலும்; Ground ல கிடக்குற தென்னமட்டைய வச்சி bat செஞ்சி விளையாடுவோம்...

### மதனா

மாமியார்: உனக்கு டீ போட தெரியுமா?




மருமகள்: டீ போட தெரியுமாவா.. குக்கர்ல பால ஊத்தி மூனு விசில் விட்டு அப்படியே பொங்கவிடுவோம்.

### சிறிகரன்

மனைவிகளில் 2 வகைகள் இருங்குங்க!!

முதல் வகை!

புருஷன் சொல்றதை கேட்டு நடப்பாங்க..!!

எவ்வளவு கோபப்பட்டாலும் ஒரு புன்னகையில மறந்துடுவாங்க...!!

எப்போதும் நம்மள குறை சொல்ல மாட்டாங்க..!!

இரண்டாவது வகை!

இப்ப உங்க எல்லாருக்கும் அமைஞ்சு இருக்கே அதான் சார் இரண்டாவது வகை

### சங்கவி

மூனு நாளா திடீர்னு என் WI-FI வேலை செய்யல அப்பறம் தான் விசாரிச்சதுல தெரிஞ்சது பக்கத்து வீட்டுக்காரன் இன்னும் பில் கட்டலையாம்..



எப்படி தான் இப்படி பொறுப்பில்லாம இருக்காங்களோ தெரியல...

### சாருஜன்

நற் சிந்தனை

நம்பி ஏமாந்தவர்களை விட இரக்கத்தால் ஏமாந்தவர்களே அதிகம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களிடமிருந்து இலங்கையை காப்பாற்றவே புலிகளின் தலைவர் யுத்தம் செய்தார்

## சிங்களப் பெண் பகிரங்கம்

(கொழும்பு)

எங்களின் தற்போதைய நிலையை கண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் சிரித்துக் கொண்டிருப்பார் என்று சிங்களப் பெண் ஒருவர் காணொளி மூலமாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அக்காணொளியில் குறித்த பெண் தெரிவித்துள்ளதாவது,

தற்போதைய நிலைமை எண்ணிப் பார்க்கும் போது ராஜபக்ஷ வினரிடம் இருந்து நாட்டை காப்பாற்றவே பிரபாகரன் யுத்தம் செய்துள்ளார். பிரபாகரன் இறந்தும் எம்மை பார்த்து சிரித்துக்கொண்டிருப்பார். புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டிருந்தால், இதனைவிட நன்றாக இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி)

# பங்களாதேஷிடமிருந்து மீண்டும் கடன் கோரியுள்ள இலங்கை

(கொழும்பு)

பங்களாதேஷிடம் இருந்து மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றத்தை இலங்கை கடனாகக் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று ஆரம்பமான பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) வங்காள விரிகுடா முன்முயற்சியில் பங்கேற்பதற்காக தற்போது இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் ஏ.கே. அப்துல் மொமனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ரி)

# உணவு பாதுகாப்பு சட்டத்தை மீறிய 407 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

பரிசோதனைகளின் போது உணவு பாதுகாப்பு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 407 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பொருட்கள் கொள்வனவின்போது நுகர்வோர் போதிய கவனம் செலுத்த வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மளிகை பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் உப்புல் ரோஹன தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் தெரிவிக் கையில், "விசேடமாக, தற்போது நாட்டில் நிலவிவரும் மின் துண்டிப்பு காரணமாக குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் கெட்டுப் போகின்றமை குறித்து கண்டறியப்பட் டுள்ளது. மீன் மற்றும் இறைச்சி வகைகள் கெட்டுப்போகின்றது.

மளிகைக் கடைகள் மற்றும் மீன், இறைச்சி விற்பனை நிலையங்களில் உள்ள பொருட்கள் மனித பாவனைக்கு பயன்படுத்த முடியாதவையாக அமைந்துள்ளன. மளிகை பொருட்களை, கொள்வனவு செய்யும் போது, உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, தரம் குறித்து நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டும். அதில் ஒட்டப்பட்டுள்ள லேபிள்கள் குறித்தும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் குறித்தும் வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஏதேனும் வித்தியாசத்தை உணர்ந்தால் அது குறித்தும் நுகர்வோர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், நாட்டில் மின் துண்டிப்பு நிலவி வருவதால் குளிர்ச்சாதனப் பெட்டிகளில் வைத்திருக்கக்கூடிய பொருட்களுக்கான வர்த்தகத்தில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு வர்த்தகர்களிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ரி)

# புத்தாண்டின் பின் பாராளுமன்றில் மாற்றம்

## ஐ.தே.க. நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை கட்டியெழுப்ப கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அவரிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த காரணத்தின் அடிப்படையிலேயே தேசிய அரசாங்கம், கூட்டு அரசாங்கம் அமைக்கப்படவுள்ளதாகவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளதாகவும் வதந்திகள் பரவி வருகின்றன. எவ்வாறாயினுளம் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் பெரிய மாற்றம் ஏற்படும் என்பது தனது நம்பிக்கை எனவும் அவர் தெரிவித்தார். (ரி)


# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



திருகோணமலை உயர் நீதிமன்றத்தில் சுருக்கெழுத் தாளராக பணிபுரிந்த

**அமரர் தேவசிகாமணி சறோஜினிதேவி**

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டு சென்றதேனோ?
பிரிவால் வாடி நிற்கின்ற
உள்ளங்கள்...

இன்று (30.03.2022) நடைபெறும் 31 ம் நினைவஞ்சலியிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்

(C-4086)

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.
077 913 8996

குடும்பத்தினர்.


# இராசிபலன்

30.03.2022
பங்குனி 16, புதன்கிழமை
திரியோதசி பிற்பகல் 1.56 மணிவரை

சதயம் முற்பகல் 11.18 மணிவரை
சுபநேரம் - 4.43-6.13 மணிவரை
இராகுகாலம் - 12.13-1.43 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்-பூசம்,
ஆயிலியம்

**வளவன்**




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.




தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பக்குவமாகச் பேசி காரியம் சாதித்துக்கொள்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.




வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள்.




மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொறுப்புக்கள் அதிகரிக்கலாம், போசன சுகமுண்டு.




எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பகையொன்று நட்பாகலாம்.




ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், மனதில் புதிய காரியங்கள் தோன்றும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும்.




தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

தான தர்மத்திற்கு அளவு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசியல் யாப்பை உருவாக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

**ஒற்றையாட்சி அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவதை தடுத்து தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி அரசியல் யாப்பை உருவாக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,1987 ஆம் ஆண்டுகொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்தமானது,நடை முறைக்குவந்தநாளிலிருந்து அதுதமிழ் மக்களது இனப் பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்றஅடிப்படையில் தமிழ் மக்கள் ஆரம்பத்திலிருந்தே அதனைநிராகரித்து வந்து ள்ளனர்.

13 ஆம் திருத்தச் சட்டமும் மாகாணசபைகள் சட்ட மூல மும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வடக்குகிழக்கு மாகாண சபைக்கானதேர்தல் நடைபெற்றபோது,தமிழர் அர சியல் அரங்கில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு அமைப்பு மட்டும் 1988 ல் அந்தத் தேர் தலில் போட்டியிட்டு வடகிழக்கு மாகாணசபையிலிருந்த நிர் வாகத்தைக் கைப்பற்றியிருந் தது.

இருந்தபோதிலும் இத னூடாக எதனையுமே சாதிக்க முடியாது என்ற உண் மையை அனுபவரீதியாக உணர்ந்தபோது,மாகாண சபையை பொறுப்பேற்றிருந்த அந்தத் தரப்புக்கூட,தாம் வகித்துவந்தமாகாண சபை அங்கத்துவத்தினை இராஜி னாமாசெய்து 13 ஆம் திருத் தத்தினை முற்று முழுதாக நிராகரித்திருந்தனர்.

34 வருடங்களுக்கு மேலாக இந்த 13ஆம் திரு த்தமும் மாகாணசபைக ளும், இலங்கை அரசியலமை ப்பில் இருந்தும் கூட,தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் ஒற்றையாட்சியை முற்றுமுழு தாக நிராகரித்தே தமது ஏகோ பித்த ஆணையை வழங்கி வருகின்றனர். தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற - தமிழ்த் தேசம் தன்னுடைய சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய - இணை ந்த வடக்கு-கிழக்கு தாயகம் பாதுகாக்கப்படுகின்ற சமஸ்டித் தீர்வையே கோரிவருகின்றார் கள்.

கடந்த 2022 ஜனவரி 30ஆம் திகதி யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவிலும், 2022 மார்ச் மாதம் 13ஆம் திகதிவவு னியாதாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுதிடலிலும், மக்கள் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றிருந்தன. அதில், தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் அணிதிரண்டு, 13ஆம் திருத்தம் தீர்வுக்கான தொடக்கப்புள்ளியுமல்ல, இறு தித் தீர்வுமல்ல என்பதனை ஆணித்தரமாக வெளிப்படு த்தியும், ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலைமுடக்கும் வேலைத் திட்டங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யிலும்,அதேவேளை- தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற - இணைந்த வடக்கு-கிழக்கு தாயகத்தில்,தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைஅங் கீகரிக்கின்ற சமஸ்டித் தீர் வை வலியுறுத்தியுள்ளதுடன், அத் தகைய தீர்வை அடைந்து கொள்ள இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இல ங்கைமீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென வும் மேற்படிபேரணிகள் ஊடாக வலியுறுத்தியுள்ளார் கள்.

ஈழத் தமிழ்த் தேசமக் களின் நலன்களைப்பேணும்வ கையில், இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து, ஒற்றையாட்சிஅரசியல் யாப்பை கொண்டு வருதனை தடுத்து ,தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப் பட்ட சமஸ்டி அரசியல் யாப் பினை கொண்டு வருவதனை இந்தியா உறுதிப்படுத்த வேண் டும் என தெரிவித்தார். (4-5)

# மரியசேவியர் அடிகளாரின் 1ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தின் ஸ்தாபக இயக்குநர் "கலைத்தூது" அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் மறைவின் முதலாமாண்டு நினைவு நிகழ்வுகள் திரும றைக் கலாமன்றத்தின் ஏற் பாட்டில் நாளைமறுதினம் முத லாம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக அன்றைய தினம் மு.ப.11.00 மணிக்கு யாழ்.தூய மரியன்னை பேரா லயத்தில் நினைவுத் திருப்பலி இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் பிற் பகல் 4 மணிக்கு இல. 15, றக்கா வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் இடம்பெறும். சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமா கும் இந்நிகழ்வுகளுக்கு மன்ற த்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமை தாங்குவார்.இதன் போது மரியசேவியர் அடிக ளாரின் நினைவாக அமைக்க ப்பட்ட நினைவாலயத்தை யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்து வைப்பார்.தொடர்ந்து இசை அஞ்சலி,நினைவஞ்சலி உரைகள் என்பவற்றுடன் மரியசேவியர் அடிகளாரின் முதலாமாண்டு நினைவாக "மரிய சேவியம்" நூல் வெளி யீடும் இடம்பெறும். (5-4)

# நாடக கீர்த்தி விருது



(குப்பிழான்)

அரச நாடக விழாவில் கூத்துக் கலைஞர் யூல் ஸ்கொலினுக்கு நாடக கீர்த்தி விருது வழங்கப்பட்டுள் ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தாமரை தடாக மகி ந்த ராஜபக்ச கலையரங்கில் கலாசார அலுவல்கள் திணை க்களத்தின் அரசநாடக விழா-2021 இடம்பெற்றது.

மேற்படி விழாவில் நாடகத் துறைக்குரிய வாழ்நாள் சாத னையாளர் விருதான "நாடக கீர்த்தி" விருதை யாழ்ப்பா ணம் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் கலாபூஷணம் பி.யூல்ஸ்கொலின் பெற்றுக் கொண்டார். (5-4-18)



தவக்காலத்தை முன்னிட்டு மானிப்பாய் அருணோதய மன்றத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் புனித அன்னாள் ஆலய மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் யே.றொபின்சன் தலைமையிலும்,மேற்படி ஆலயப் பங்குத் தந்தை அருட்தந்தை- ம.றெக்ஸ் சவுந்தராவின் நெறிப்படுத்தலிலும் நடைபெற்றது.

(படம்:- ரவிசாந்)

# தற்போதைய நிலையில் பிரதேச சபையின் செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்ததாக அமைய வேண்டும்

## தவிசாளர் வாமதேவன்

(சாவகச்சேரி)

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் அபிவிருத்தியைக் கைவிட்டு மக்களின் அன்றாட வாழ்விய லில் கவனம் செலுத்த வேண் டிய தேவைப்பாடு ஏற்பட்டி ருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாம தேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் திங் கட்கிழமை பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர் வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

நாட்டில் பொருளாதாரப் பிரச்சனை கட்டுக்கடங்காமல் கைமீறிச் சென்று கொண்டிரு க்கின்றது.இந்த நிலைமை தொடர்ந்தால் உள்ளூராட்சி சட்டங்களை மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படலாம். பிர தேசசபை ஓர் சேவை நிறு வனம் என்ற அடிப்படையில் எமது செயற்பாடுகள் மக்களின் நலன் சார்ந்ததாக அமைய வேண்டும்.அதை நோக்கியே எமது செயற்பாடுகள் இருக்க வேண்டும்.மக்களுக்கான நிவாரண உதவிகள் என்பது பிரதேசசபையின் சட்ட வரை யறைக்குள் உள்ளடங்கா விட்டாலும், மக்களின் பிரச்ச னைகளுக்கு ஏதோவொரு வகையில் தீர்வு காண வேண் டியது அவசியம்.

பட்டினிச்சாவில் இருந்து மக்களை காப்பாற்ற வேண் டும்.பிள்ளைகளின் போசனை விடயத்தில் நாம் கவனம் செலு த்த வேண்டும்.நாம் ஏதாவது வகையில் மக்களுக்கு உதவ வேண்டும். இது நாம் எடுக்கும் தீர்மானமாக அல்லாமல் அமைச்சு மட்டத்தில் எடுக்கும் தீர்மானமாக இருக்க வேண்டும்.

பட்டினி அதிகரித்தால் போசனை இன்மை மற்றும் சுகாதாரம் சார்ந்த பல பிர ச்சனைகள் தலைதூக்கும். நாட்டில் உள்ளூர் உற்பத்தி களை அதிகரிப்பதற்கான அடிப் படைத் திட்டங்கள் எவையும் இல்லை.இது எதிர்கால சமூ கத்திற்கு ஆரோக்கியமான விடயம் அல்ல.

நாங்களும் ஏனைய திணைக்களங்களைப் போல் அல்லாமல் அபிவிருத்தியைக் கைவிட்டு மக்களின் அன்றாட பிரச்சனைகளை நோக்கிய தாக எமது செயற்பாடுகளை கொண்டு நகர்த்த வேண்டும்.

உள்ளூராட்சி சட்ட வரை யறைகளையும் தாண்டி மக்க ளின் பட்டினியைத் தீர்ப்பதற் கான வழிவகைகளை தேட வேண்டிய கட்டாயத்தில் உள் ளூராட்சிசபையினராகிய நாம் இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-35)

# பேராசிரியர் 'நந்தி' இன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து நட த்தப்படும் நினைவுப் பேருரை களின் வரிசையில் சமுதாய மருத்துவத்துறையின் வாழ் நாள் பேராசிரியரும், முன் னாள் மருத்துவபீட பீடாதிபதி யும், "நந்தி" என எழுத் துலகில் அறியப்பட்டவருமான பேரா சிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரத்தின் நினை வுப் பேருரை இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணி க்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஹூவர் கேட் போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் "சமுதாயத்துடன் தொடர்புபட்ட மருத்துவக் கல்வி: எதிர்கால நோக்கும், சவால்களும்" என்ற தலை ப்பில் மருத்துவபீட பீடாதிபதி மருத்துவர் இரா. சுரேந்திர குமாரன் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (5-4-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூ.10 இலட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா கூமாங்குளத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டதாக பண்டாரிக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கமைய கூமாங்குளத்தில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து 18 மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியினைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரையும் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பண்டாரிக்குளம் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(5-4-299)


## பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் மின் இணைப்பு மற்றும் பைப்லைன் ஆகிய வேலைகளை இல்லத்தில் முழுநேரம் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய தொழில்நுட்ப அலுவலர் தேவை.

**தகமைகள்**

1. வயதெல்லை 25-50 வயதிற்கு உட்பட்டவர்கள் தேவை.
2. தொழில் தகமை சான்றிதழ் (NVQ) உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
3. நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் எதிர்வரும் 05.04.2022 இற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்களின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க முடியும்.

(சி-4085)

தொடர்பு முகவரி
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி
**021 492 3118, 077324 0950**


# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவைகலட்டி-பிராங்கிளி அருள் மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர் திருவிழாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (5)

---

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டு தினங்கள் இடம் பெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்ஷவமும்,மறுநாள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)


## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- வேலணை பிரதேச சபை, தலைமை அலுவலகம்
காலம் :- 31.03.2022 வியாழக்கிழமை மு.ப 10.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

(சி-4089)

தொடர்புகளுக்கு:-
**021 221 1505**

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
தவிசாளர்,பிரதேச சபை, வேலணை.



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 29¼ சூரி 5 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: உயர்தரம் தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12455

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 33½ சூரி 5 செவ் 3 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: தேயிலை விற்பனை பிரதிநிதி
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12458

பிறப்பு:1990 கிறிஸ்தவம் RC
உயரம்:164 cm
தகைமை/தொழில்:(BBA 9 Hons), MAAT அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/12462

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: 46½ சூரி1 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:T.O
எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: சூரி 12 செவ் 5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSc,Reading MSc Engineer
எதிர்பார்ப்பு: Doctor , Engineer வெளிநாடு (USA, UK, Canada, Australia, Singapore)
தொ.இ:G/9378

பிறப்பு:1971 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: சூரி 9 செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L கணக்காளர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம் அல்லது சொந்த தொழில்
தொ.இ:G/9403

பிறப்பு: 1973 இந்து கத்தோலிக்கம்
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா:20 சூரி11 செவ் 6 இல்
தகைமை/தொழில்: B.Com, HNDA, MBA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச வேறு உத்தியோகம் இந்து, கத்தோலிக்கம் ஏற்கப்படும்
தொ.இ:G/9404

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: சூரி 12 செவ் 11 உயரம்:5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9415

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைபேசியூடாக
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -01 கடற்கரை வீதி 235 ஆதன இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் ஏ-துரையப்பா என்பவரின் பெயரில் காணப்படுகின்றது.

இதன் கீழ் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 2005.04.06 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.அ.இ.ஏகநாதன் முகதாவில் 1338 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கமும், ஸ்ரீதேவசேனாவும் குறித்த ஆதனத்தை விஸ்வலிங்கம் மோகனமூர்த்திக்கு அறுதியாகவிற்றுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கச்சேரியடி கண்டி வீதி 92 ம் இலக்கத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் மோகனமூர்த்தியும் பெண் விஜிதாவும் சேர்ந்து பிரசித்தி பெற்ற நொத்தாரிசு சே.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2968 ம் இலக்க 31.05.2005 ம் திகதியிடப்பட்ட அறுதி மூலம் சின்னவன் ஸ்ரீபன் சுந்தரராஜும் பெண் அருள்வதனாவுக்கும் அறுதி உறுதி மூலம் நிறைவேற்றியுள்ளார்கள்.

பின்னர் 252 யாழ் வீதி மானிப்பாய் சின்னவன் ஸ்ரீபன் சுந்தரராஜனும் பெண் அருள்வதனாவும் பிரசித்த நொத்தாரிசு இ. வசந்தசேனன் முகதாவில் 7728ம் இலக்க 05.05.2007 ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் மானிப்பாய் பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்காவும் அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை:- வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குழி கோவிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ்.நகர் 2ம் பிரிவில் அமைந்துள்ள "அன்னமாளிகை" நிலப்பரப்பு 2 குளி 07. ஆனால் அது 30.01.2005ல் நில அளவையாளர் பி.தவராசாவால் அளந்து வரைந்த நில அளவைப்பட 27.02 ம் இலக்கத்தின்படி நிலபரப்பு 2 குளி 0.32 ஆகும்.

எல்லை
கிழக்கு:- கிராண்ட் கொட்டல் ஆதனம்.
வடக்கு:- மீதி ஆதனம்.
மேற்கு:-மழவராஜர் நம்பிக்கை சொத்தின் ஆதனம்.
தெற்கு:- கடற்கரை வீதி.

தற்போது பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்கம்மா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்கம்மா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்,
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(சி-4084)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 07

# அவள் மருமகள் அல்ல மகள்!

எனக்கு 77 வயது!

மனைவியை இழந்து பத்து வருடங்களாகிறது. அன்பின் நீரூற்ற மறந்த எத்தனையோ முதியவர்களில் நானும் ஒருவன். இருக்கின்ற நான்கு மகன்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு மகனிடம். இப்போது இருப்பது மூன்றாவது மகனிடம்.

இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறது. கடைசி மகனிடம் செல்ல இப்போதிருந்தே வயதான விரல்களை கொண்டு எண்ணிக்கொண்டு இருக்கிறேன். கடைசி மருமகளிடம் செல்லும் நாட்களுக்காக போன தீபாவளிக்கு இரண்டாவது மருமகள் வாங்கித்தந்த வெள்ளை வேட்டி பழுப்பு நிறமாகி பலநாட்கள் ஆகிவிட்டது.

முதல் மகன் வாங்கித்தந்த கண்ணாடி உடைந்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டது. இப்போது இருக்கும் கோபக்கார மகனிடம் கேட்டால் என்ன சொல்வானோ என்று பயந்து கண்ணாடியை ஒளித்து வைத்துவிட்டு வெறுங்கண்களோடு தடுமாறிக்கொண்டு இருக்கிறேன்.

கடைசி மருமகளிடம் சொல்லித்தான் மாற்றிக்கொள்ள வேண்டும். இன்னும் நான்கு நாட்கள்தான் என்பதால் எல்லோரும் வேலைக்கு போனபின்பு என்னுடைய வேட்டி ஜிப்பாக்களை துவைத்து வைத்துக்கொள்ள வேண்டும்,

துணி துவைக்கும் மிஷின் இருந்தாலும் என்னுடைய துணிகளை தனியாகத் தான் போடவேண்டும் என்று சொல்லி, அவர்களின் ஆடையோடு கூட ஒட்டவிடாமல் ஏனோ அந்நியமாக வைத்திருக்கிறாள்.

கஷ்டமாக இருந்தாலும் மகனிடம்கூட எதுவும் சொல்வதில்லை. மருமகளும் சொல்ல விடுவதில்லை. இன்னும் நான்கு நாட்கள்தானே என்று ஹொஸ்டலில் இருந்து ஆசையோடு வீட்டுக்கு ஓடும் குழந்தையைப்போல் கடைசி மருமகளின் வீட்டுபோக என்னுடைய உடைகளை நானே ஆர்வமாக துவைத்துக் கொண்டிருக்கிறேன்.

கடைசி மகன் மற்றவர்களை போல் கார், சொந்த வீடு என்று வசதியாக இல்லை, வாடகை வீடுதான், இரண்டு பேருக்கும் இரண்டு மோட்டார் ிபைக்குகள் இருக்கிறது. நான் ஊருக்கு போகும்போதெல்லாம் மருமகள்தான் ஸ்கூட்டர் எடுத்துக்கொண்டு பஸ் ஸ்டேண்ட் வருவாள் அந்த ஸ்கூட்டரில் உட்கார்ந்து கொண்டு போவதில் அப்படி என்ன ஆனந்தமோ எனக்கு தெரியாது. என்னென்ன நடந்தது என்று அவள் கேட்டுக்கொண்டே போக நான் பின்னால் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தபடி யாரைப்பற்றியும் எந்த குறையும் சொல்லாமல் நல்லதை மட்டுமே சொல்லிக்கொண்டு போவேன்.

அவள் கெட்டிக்காரி என்பதால்போகும் வழியில் எனக்கு பிடித்த ரோஸ்மில்க் வாங்கி கொடுத்து வேடிக்கை பார்க்கும்போது கண்டுபிடித்து விடுவாள். வீட்டுக்கு போனதும் என்னுடைய கட்டை பையை ஆராய்ச்சி செய்து மருந்து மாத்திரைகளாவது சரியாக வாங்கி கொடுத்திருக்கிறார்களா என்று தேடிப்பார்த்து திட்டுவாள்.

அதில் அவளுக்கு பிடித்த பாதுஷா சுவீட்டை நான் வாங்கி வந்திருப்பதை பார்த்து சிரித்துவிடுவாள். இவளை ஏன் எனக்கு மகளாக பெற்றுத்தரவில்லை என்று மீனாட்சியிடம் சண்டை போடக்கூட அவள் அருகில் இல்லாமல் எனக்கு முன்னால் போய் சேர்ந்துவிட்டதில் நிறைய வருத்தம் எனக்கு.

நான்கு நாட்கள் கழித்து பஸ்ஸில் போய் இறங்கினேன். எப்போதும் போல் எனக்கு முன்வந்து காத்திருந்தாள். ஓடி வந்து பையை வாங்கிக்கொண்டாள். ஸ்கூட்டரில் பத்திரமாக உட்கார வைத்துக்கொண்டாள்.

உங்களை ஷேவிங் பண்ண கூட கூட்டிட்டு போக நேரம் இல்லையாமா அவங்களுக்கு, அவ்ளோ பெரிய ஆளுங்களா ஆயிட்டாங்களா? எனும்போதே அதெல்லாம் இல்லம்மா ரெண்டுபேரும் என்று ஆரம்பிக்கும்போதே இப்படியே பேசி பேசி அவங்களை காப்பாத்திட்டு இருக்காதீங்கப்பா பேசாம வாங்க என்று ரோஸ்மில்க் கடைக்கு போவதற்குள் சவரக்கடைக்கு தான் அழைத்து சென்றாள்.

கண்ணாடி என்ன ஆச்சி என்று முறைத்தாள். பெயிலான மார்க் சீட்டை காட்டும் குழந்தையை போல் தயங்கி தயங்கி ஒரு பக்கம் உடைந்த கண்ணாடியை காட்டினேன். கோபத்தை வெளிக்காட்டாமல் கண்ணாடி மாற்ற அழைத்துச் சென்றாள்.

இதுக்கு தான் உங்களை அனுப்ப மாட்டேன்னு சண்டை போடுறது. புரியுதாப்பா....என்று முறைத்தாள் என்னிடம் பதிலில்லை. ஊர் உலகத்துல யாரும் எதுவும் சொல்லிட கூடாதுன்னு பெருமைக்கு கூட்டிட்டு போறது அப்புறம் உங்களை கஷ்டப்படுத்தி அனுப்புறது.. இதேவேலையா போச்சு எல்லாருக்கும் என்று முணுமுணுத்துக்கொண்டே கண்ணாடியை மாற்றிக்கொடுத்தாள்.

துணியெல்லாம் சுத்தமாதுவைச்சிருக்கே நீங்கதானே துவைச்சீங்க? பொய் சொல்லாம சொல்லுங்க என்று டீச்சரை போல் முறைக்க என்ன செய்வது என்று தெரியாமல் பாதி பற்களோடு சந்தோஷமாய் சிரித்தேன். அவளும் சிரித்துவிட்டாள்!

எனக்கு தேவையான எல்லாவற்றையும் வாங்கி பையை நிரப்பிக்கொண்டு வீட்டுக்கு அழைத்து சென்றாள். ஸ்கூட்டரில் உட்கார்ந்து செல்லும்போது லேசா மயக்கமா இருக்கு சாஞ்சிக்கட்டுமாம்மா என்று கேட்டேன். கொஞ்சதூரம் தான்பா போயிடலாம் பத்திரமா சாஞ்சிகொங்க என்று சொல்ல

மெதுவாக சாய்ந்துகொண்டேன். உண்மையில் எனக்கு மயக்கமெல்லாம் இல்லை. நான் பெறாத மகளின் மீது சாய்ந்துகொள்ள ஆசையாக இருந்தது. அதனால்தான் பொய்சொல்லி சாய்ந்துகொண்டேன். இன்னும் ஒரு மாதத்திற்கு அவளின் செல்லதிட்டுகளுக்கு நடுவில் காணாமல்போகும் என் முதுமையின் ஊமைக்காயங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்

## பிம்ஸ்டெக் உறுப்

(கொழும்பு)

**சைபர் தாக்குதல் மற்றும் போதை
கூட்டாக எதிர்க்க வேண்டும் என்று இ
ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்**

பிம்ஸ்டெக் அமைப்பில் இந்தியா, இலங்கை, வங்கதேசம், மியன்மார், தாய்லாந்து, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பு நகரில் நடைபெறும் 18 ஆவது பிம்ஸ்டெக் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

இது குறித்து தமது டுவிட்டர்

# கன்னத்தில் பளார்

## மன்னிப்புக் கேட்ட நடிகர் வில் ஸ்மித்

(வோஷிங்டன்)

ஒஸ்கார் விருது விழாவில் நிகழ்ச்சி தொகுப்பாளரான கிறிஸ் ராக்கின் முகத்தில் பளாரென அறைந்தமைக்கு ஹொலிவுட் நடிகர் வில் ஸ்மித் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 94 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிலையில், கிங் ரிச்சர்ட் படத்தில் நடித்ததற்காக நடிகர் வில் ஸ்மித், சிறந்த நடிகருக்கான விருதைப் பெறுவதற்காக இந்த ஆண்டு ஒஸ்கார் விருதுக்கு சென்றிருந்தார்.

அப்போது நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த நடிகர் கிறிஸ் ராக் நகைச்சுவையாக பேசிக் கொண்டிருந்தார். அவர் நடிகர் ஸ்மித்தின் மனைவி நடிகை ஜடா பிங்கெட் ஸ்மித் பற்றி நகைச்சுவையாக பேசினார்.

முடி உதிர்தலுக்கு வழி வகுக்கும் புழுவெட்டு எனப்படும் அலோபீசியா நோயினால் மொட்டையடிக்கப்பட்ட தலையை ராக் நகைச்சுவையாகப் பேசினார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த நடிகையின் கணவரும் ஹொலிவுட் நடிகருமான வில் ஸ்மித், மேடையை நெருங்கி தொகுப்பாளர் கிறிஸ் ராக்கின் முகத்தில் பளாரென அறைந்து, விழா அரங்கை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

பின்னர் அவர் தனது இருக்கைக்குத் திரும்பி, "என் மனைவியின் பெயரை உன் வாயிலிருந்து விலக்கிவிடு" கூச்சலிட்டார்.

இந்த சம்பவம் குறித்து ஒஸ்கார் திரைப்பட அகாடமி ஸ்மித்தை கண்டித்தது.

இந்நிலையில், வில் ஸ்மித் மன்னிப்புக் கேட்டு இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு ஒன்று செய்துள்ளார்.

வன்முறை அதன் அனைத்து வடிவங்களிலும் விஷமானது மற்றும் அழிவுகரமானது. நேற்று முன்தினம் இரவு நடந்த ஒஸ்கார் விருது விழாவில் எனது நடத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் மன்னிக்க முடியாதது.

நகைச்சுவைகள் எனது வேலையின் ஒரு பகுதியாகும், ஆனால் ஜடாவின் உடல்நிலை குறித்த நகைச்சுவை என்னால் தாங்க முடியாத அளவுக்கு இருந்தது. நான் உணர்ச்சிவசப்பட்டேன்.

நான் உங்களிடம் பகிரங்க மாக மன்னிப்புக் கேட்க விரும் புகிறேன் கிறிஸ். நான் தவறு செய்தேன். நான் வெட்கப்படுகிறேன், அன்பும் கருணையும் நிறைந்த உலகில் வன்முறைக்கு இடமில்லை.

ஒஸ்கார் விருது விழாவில் நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் உலகம் முழுவதும் பார்க்கும் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன்.

வில்லியம்ஸ் குடும்பத்தினரிடமும் எனது கிங் ரிச்சர்ட் குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். மற்றபடி நம் அனைவருக்கும் ஒரு அழகான பயணமாக இருந்ததை எனது நடத்தை கறைபடுத்தியதற்கு நான் வருந்துகிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## வெளிநாடு

# ...கு எதிராக கூட்டாக போராட வேண்டும்

## ...பு நாடுகளுக்கு இந்தியா வலியுறுத்தல்

...தைப்பொருள் கடத்தல் ஆகியவற்றை ...இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ...ர்.



பதிவில் ஜெய்சங்கர் கூறியிருப்பதாவது,

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் கூட்டாக பயங்கரவாதம், வன்முறை தீவிரவாதத்தை எதிர்த்து போராட வேண்டும்.

பயங்கரவாதம், தீவிரவாத வன்முறை, சைபர் தாக்குதல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றை கூட்டாக எதிர்க்க வேண்டும்.

வணிக ஒத்துழைப்பு, துறைமுக வசதிகள், படகு சேவைகள், கடலோர கப்பல் போக்குவரத்து உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பு முக்கியமானது.

கடல்சார் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் எங்கள் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## 50 வாகனங்கள் மோதி விபத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொட்டிக்கிடக்கும் பனியில் பிரேக் பிடிக்காமல் கார், டிரக் உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தின் வீடியோ வெளியாகி உள்ளது. (நி)

# ரயில் மீது தாக்குதல்

## பயணிகளை கடத்திய ஆயுததாரிகள்

## நைஜீரியாவில் சம்பவம்



(அபுஜா)

நைஜீரியாவில் ஆயுததாரிகள் வடக்கு கடுனா மாநிலத்தில் ரயிலில் இருந்து சுமார் ஆயிரம் பயணிகளில் பெரும்பாலானோரை கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை தலைநகர் அபுஜாவிலிருந்து வடக்கு நைஜீரிய நகரத்திற்குச் சென்ற பயணிகள் ரயிலில் இருந்தே இவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடந்தபோது கடுனாவுக்கு சுமார் 25 கிலோ மீற்றர் தொலைவில் ரயில் நிறுத்தப்பட்டது.

ஆயுததாரிகள் குழு அபுஜா மற்றும் கடுனா நகருக்கு இடையே தண்டவாளத்தை வெட்டி, ரயிலை கட்டாயப்படுத்தி நிறுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6 மாதங்களில் ரயில் மீது தாக்குதல் நடத் தப்படுவது இது இரண்டாவது முறையாகும்.

கடந்த சனிக்கிழமை கடுனாவின் சர்வதேச விமான நிலையத்தைத் தாக்கிய ஆயுததாரிகள் குழுவின் சம்பவத்தை தொடர்ந்து இது பதிவாகியுள்ளது.

இதுவரை இந்த தாக்குதலுக்கு எந்த குழுவும் பொறுப்பேற்கவில்லை. 'பயங்கரவாதிகளிடம் சிக்கிய அபுஜாவிலிருந்து கடுனா செல்லும் ரயிலை இராணுவம் பாதுகாத்துள்ளது' என்று கடுனா மாநில அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (நி)

## இம்ரான்கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் இம்ரான் கான் அரசுக்கு எதிரான தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஷெபாஸ் ஷெரீப் தாக்கல் செய்தார்.

பாகிஸ்தானில் நிலவி வரும் விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி ஆகிய பிரச்சினைகளுக்கு இம்ரான் கானின் "திறமையற்ற நிர்வாகமே" காரணம் என்று எதிர்க் கட்சியினர் கடுமையாக குற்றஞ்சாட்டி, அவர் இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூறி வருகின்றனர்.


எதிர்க்கட்சியினர் மட்டுமல்லாமல் இம்ரானின் சொந்தக் கட்சியினரும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பதால் அரசியல் களம் அனல் பறந்து கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானில் தனது ஆட்சியை கவிழ்க்க வெளிநாட்டு சதி நடப்பதாகவும், சில நாடுகள் மறைமுகமாக எதிர்க் கட்சிகள் மூலமாக தனது அரசை கவிழ்க்கும் வேலையில் ஈடுபட்டு இருப்பதாகவும் இம்ரான் கான் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்நிலையில், பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்று இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ஷெபாஸ் ஷெரீப் முன்மொழிந்த தீர்மானத்துக்கு 161 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது. (நி)

## கரைக்கு வந்த ஆயிரக்கணக்கான கடல் ஆமைகள்



முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்த கடல் ஆமைகள் கருத்தரித்ததும், ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு கடற்கரையை நோக்கி கூட்டமாகப் பயணிக்கத் தொடங்கும்.

அவை பெரும் கூட்டமாக வந்து மணலில் குழி தோண்டி முட்டைகளை இடுகின்றன.

முட்டை இடுவதற்காக ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான ஆலிவ் ரிட்லி ஆமைகள் ஒடிசா கடற்கரைக்கு வந்து சேரும்.

2.45 இலட்சத்திற்கும் அதிகமான ஆமைகள் மணலில் முட்டையிடுவதற்காக காஹிர் மாதா மற்றும் ருஷிகுல்யா ரூக்கரி ஆகிய கடற்கரை பகுதிகளுக்கு கூட்டமாக படையெடுத்து வருவதை காண முடிகிறது. (நி)

## ஆண்களும் பெண்களும் ஒன்றாக பூங்கா செல்ல தலிபான்கள் தடை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது முதல், தலிபான்கள் அங்கு தொடர்ந்து பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பாலின பிரிவினை அடிப்படையில் பெண்களுக்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் தற்போது ஆண்கள் மற்றும் பெண்கள் ஒன்றாக பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு செல்ல தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

அதன்படி வாரத்தில் 4 நாட்கள் ஆண்களும், 3 நாட்கள் பெண்களும் பொழுதுபோக்கு பூங்காக்களில் அனுமதிக்கப்படுவர் என தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

தங்களின் புதிய அரசுக்கு சர்வதேச அங்கீகாரம் தேவை என தலிபான்கள் வலியுறுத்தி வரும் அதேவேளையில், சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பை மீறி தொடர்ந்து பாலின பிரிவினை கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றனர்.

6 ஆம் வகுப்புக்கு மேல் மாணவிகள் கல்வி கற்க தடை விதிப்பதாக தலிபான்கள் அண்மையில் அறிவித்தது சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவள திணைக்களத்தினரை எதிர்த்து வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

கால்நடைகளுக்கான மேச்சல் தரவையை வனவள திணைக்களத்தினர் வேலி போட்டு அடைப்பதாக தெரிவித்து மதுராநகர் மற்றும் இத்திக்குளம் பொதுமக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மதுராநகர் கிராமத்தை அண்டிய 6 கிராமங்களைச் சேர்ந்த மக்களின் கால்நடைகள் மேச்சலுக்காக சென்றுவரும் நிலையில் கடந்த சில நாட்களாக வனவளத் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்குள் கால்நடைகள் வருவதை தடை செய்யும் வகையில் வேலி அமைத்து வருகின்றனர்.

இதன் காரணமாக தமது கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த பகுதிக்குள் காணப்படும் குளத்தின் நீரேந்து பிரதேசத்திலேயே கால்நடைகள் நீரை பருகுவதால் தற்போது அதுவும் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கிராம மக்கள் தமது கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தினை வேலி போட்டு அடைப்பதனை வனவளத்திணைக்களத்தினர் நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழுவின் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு. திலீபனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது பிரச்சினைகளை தெரிவித்ததையடுத்து குறித்த பகுதிக்கு வனவள திணைக்களத்தினரை வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் பணித்திருந்தார்.

இதனையடுத்து அங்கு வந்த வனவளத்திணைக்களத்தினரிடம் இன்று அரசாங்க அதிபர் தலைமையில் கிராம மக்கள் சந்தித்து குறித்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் எனவும் அதுவரை வனவளத்திணைக்களத்தினர் பொதுமக்கள் கால்நடைகளை குறித்த பகுதிக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல அனுமதிக்குமாறு தெரிவித்தார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த வனவளத்திணைக்களத்தினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களும் குறித்த பகுதியில் இருந்து கலைந்து சென்றனர். (5-4-299)

# கமக்கார அமைப்புக்களுடன் சிறீதரன் எம்.பி.சந்திப்பு

(முறிகண்டி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிற்கும் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம் பெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை காரணமாக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவற்றை குறைப்பதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறிமுறை தொடர்பிலும் உரப் பிரச்சினை தொடர்பிலும் உரமின்மை காரணமாக கடந்த போக செய்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (5-4-100)

# எரிபொருள் இன்மையால் கடலுணவுகளின் விலை அதிகரிப்பு



(மன்னார்)

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கருவாடு உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி இன்மையால் மீன்களின் விலை அதிகரித்துள்ளமையினால் கருவாடு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கருவாடுகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக மக்கள் தற்போது கருவாடுகளைக் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலை நிலவி வருகின்றது. (5-4-285)

# காடழிப்பைப் தொடர்ந்து காணிகள் அபகரிப்பு

## திலீபன் எம்.பி.குற்றச்சாட்டு

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் தொடர்ந்து காடழிப்பு இடம்பெற்று வருவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத், தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக யுத்தத்தின் பின் மீள்குடியேறியுள்ள கன் னாட்டி, கூழாங்குளம், கணே சபுரம், நீலியாமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பலரும் தமது விவசாயம் மற்றும் வாழ்வாதார தேவைக்காக போதியளவிலான நிலமற்றவர்களாக உள்ள நிலையில் வேறு பகுதியில் இருந்து வருபவர்கள் காடுகளை அழித்து நிலங்களை அபகரித்து வருகின்றனர். இது தொடர்பில் மக்களால் அப்பகுதி கிராம உத்தியோகத்தர், செட்டிகுளம்பிரதேச செயலாளர்மற்றும் வனவளத் துறையினர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தார். (5-4-250)

# வவுனியா சாலை இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(நெளுக்குளம்)

இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இப் பணிப்புறக்கணிப்பின் காரணமாக வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இப்பணிப்புறக்கணிப்பு காரணமாக மக்கள் பேருந்து இன்றி நீண்ட நேரம் காத்திருந்தனர்.

பணிப்பகிஷ்கரிப் பில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது,

வேதன உயர்வினை கோரி இப்பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டுள்ளோம். 2015, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு பிற்பாடு எமக்கான வேதன உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். (299-5-4)

# அத்தியாவசிய பொருட்கள் வழங்க மெசிடோ அமைப்பு முன்வந்துள்ளது

(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் ,காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள 1200 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக உலர் உணவுப் பொதிகள் வழங்க மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) முன்வந்துள்ளது. குறித்த குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, சீனி ஆகியவற்றை உடனடியாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (5-4-285)

# சதொசவில் பொருட்களை பெற்றுக் கொள்ள முண்டியடிக்கும் மக்கள்



(பனிக்கன்குளம்)

நாடளாவிய ரீதியில் பொருட்களின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில் சதொசவில் பொருட்களை பெற்றுக்கொள்ள மக்கள் முண்டியடிக்கும் நிலை காணப்படுகிறது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாஞ்சோலை சதொச விற்பனை நிலையத்தில் பொருட்களை மிக நீண்ட வரிசையில் நின்று பெற்றுக் கொண்டனர். (5-4-281)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 300 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 |
| கோவா | 80 | 100 | 300 |
| கரட் | 140 | 200-250 | 240 |
| பூசணி | 50 | 80 | 100 |
| புடோல் | 150 | 150 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 240 |
| பாகற்காய் | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 140 | 150 | 160 |
| பீற்றூட் | 120 | 140 | 150 |
| கறிமிளகாய் | 180 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 1400 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | - | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023



(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம் வரை)

**பெயரின் முதல் எழுத்துக்கள்: யே, யோ, ப, பி, பு, பூ, பா, ன, டே, பே உள்ளவர்களுக்கும்**

**தனுசு இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் ஐந்தாம் இடமான பூர்வபுண்ணிய ஸ்தானத்திற்கு வரப்போகிறார். அதேநேரம் கேது பகவான், உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திர பாதசாரங்களுக்கேற்ப பலன்களை வழங்குவார்கள்.

**5 ஆம் இடத்து ராகு,<br>11 ஆம் இடத்து கேது**

இந்த ராகு-கேது பெயர்ச்சியில், ராகு பகவான் உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான 5 ஆம் இடத்திற்கு வருகிறார். இது பிள்ளைகளைப் பற்றி அறிந்து கொள்ள வைக்கும் இடமாகும். அந்த இடத்திற்கு ராகு வரும்பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். 'கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, நல்ல பொருத்தமான வேலை அமையும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். 11 ஆம் இடத்திற்கு வரும் கேதுவால் பொருளாதார பற்றாக்குறை அகலும். மூத்த சகோதரர்களால் முன்னேற்றம் உண்டு. பழுதடைந்த வீட்டைப் பராமரிக்கும் பணியைத் துரிதமாகச் செய்வீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, தந்தை வழி உறவு பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அது கைகூடும். புதிய வாகனம் வாங்கி பயணிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். தனியார் துறையில் பணிபுரிபவர்கள், அரசு வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். பொதுவாக புதிய முயற்சிகளில் வெற்றியும் ஆதாயமும் கிடைக்கும் நேரம் இது.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனம் தேவை. உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகைக் கிரகமாகும். அதன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் காலகட்டத்தில், நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கும். குணமான நோய் மீண்டும் தலை தூக்கும். கூட்டாளிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பச் சுமை அதிகரிக்கும். 'ஆற்றல் மிக்கவர்கள் அருகில் இருந்தாலும் அவர்கள் மூலம் ஒன்றும் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். கல்யாணம் போன்ற சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். உறவினர்கள் பகை மறந்து பாசத்தோடு பழகுவர். உத்தியோகம் சம்பந்தமாக முயற்சி செய்தவர்களுக்கு வெளிநாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். 'பணி நிரந்தரம் ஆகவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது பணி நிரந்தரம் ஆகும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் அல்லது இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உங்களுக்கு மிகுந்த நற்பலன்கள் கிடைக்கும். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சியும், நண்பர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். உடன் பிறப்புகள் உங்கள் [illegible] நடந்து கொள்வர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. தற்காலிக பணியில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரமாகும். பாதியில் நின்ற கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடரும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தலைமைப் பதவிகள் தானாக தேடி வரும்.

**ராகு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)**

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பயணங்கள் அதிகரிக்கும். பாராட்டும்,




புகழும் கூடும். இடமாற்றங்கள் இனிமை தரும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தற்காலிகப் பணியில் இருப்பவர்கள், 'நிரந்தர வேலைக்கு முயற்சி செய்தும் கிடைக்கவில்லையே' என்று ஆதங்கப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து தாய் நாடு திரும்ப முடியாமல் தத்தளித்தவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சி ஏற்படும் விதத்தில் நல்ல தகவல் வரும். பெண் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**செவ்வாய் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். பஞ்சம-விரயாதிபதியாக செவ்வாய் விளங்குவதால், விரயங்கள் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் உறுதியாகலாம்.

வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இழுபறி நிலையில் இருந்த பஞ்சாயத்துகள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். கட்டடத் திறப்பு விழா, கடைத் திறப்பு விழா போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் மேற்படிப்பு சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அது கிடைத்து மகிழ்ச்சியை வழங்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். அதன்படி வருகிற ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு குரு செல்கிறார். அது உங்கள் இராசிக்கு 4 ஆம் இடம் என்பதால், 'அர்த்தாஷ்டம குரு'வாக செயற்படுவார்.

எனவே அலைச் சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. ஒவ்வொரு காரியத்திற்கும் உழைப்பு அதிகமாக தேவைப்படும். ஆனால் எதிர்பார்த்த ஊதியம் கிடைக்காது.

உடல்நலத்திலும் கவனம் தேவை. அடுத்ததாக 22.4.2023 அன்று மேஷத்திற்கு குரு பெயர்ச்சியாகிறார். அங்கிருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மை கிடைக்கப் போகிறது. தொழில் உத்தியோகத்தில் முன்னேற்றம், தொல்லை தந்த எதிரிகள் விலகுதல், பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். இக்காலத்தில் ஏழரைச் சனி உங்களுக்கு முழுமையாக விலகி விடுகின்றது. எனவே இதுவரை இருந்த மனக் கசப்புகள் மாறும். பிள்ளைகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தி வைப்பீர்கள். உடன் பிறந்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முன்வருவீர்கள். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பொருளாதார நிலை உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு வெளியில் வந்து சுயதொழில் தொடங்க முன்வருவர்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கணவன் - மனைவி உறவில் அன்பும், ஆதரவும் கூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்கான அங்கீகாரம் கிடைக்கும். எதிர்பார்த்த பணி உயர்வும், சம்பள உயர்வும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு வரலாம். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். வியாழக்கிழமை தோறும் குருவை வழிபடுவது நல்லது.

(தொடரும்...)

## ஐந்தில் வருகிறது ராகு; ஆதரவு கிடைக்கும் இனி

**ஜோதிடக் கலாமணி<br>சிவல்புரி சிங்காரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## வீண் ஆசை ஏன்?



(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் மறு விநாடியே அவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. கூட்டத்தவரும் அவனிடம்காட்டில்அவன் பெற்ற அதிசய வீணையை ஒரு முறை வாசித்துக் காட்டும்படி வேண்டினார்கள்.

ராமப்பா சற்றுத் தயங்கினான். அப்போது மாய மந்திரங்களில் நம்பிக்கை இல்லாத ஒரு வாலிபன் "உன் வீணையை வாசித்தால் நீ விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள முடியுமாமே! உனக்கு நல்ல அதிர்ஷ்டம் தான். நீ அரசகுமாரியை நினைத்துக் கொண்டு வீணையை வாசி, அவளைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்நாள் முழுவதும் சுகமாக இருக்கலாம்" என்று கேலியாகக் கூறினான், அதைக் கேட்ட ராமப்பா ஆத்திரம் அடைந்தான். அவன் உடனே "நீ அந்த அதிசய வீணைக்கு எந்த சக்தியும் இல்லை என்றா நினைக்கிறாய்? இதோ பார், வாசித்துக் காட்டி அதற்கு உள்ள அற்புத சக்தியை நிரூபிக்கிறேன்" எனக் கூறி வீட்டினுள்ளே போய் வீணையை எடுத்து வந்தான்.

அவன் திண்ணையில் உட்கார்ந்து சரஸ்வதி தேவியை தியானித்து வீணையைத் தொட்டான். ஆனால் அவசரத்தில் அவன் மோகனராகத்திற்கு பதிலாக அமிர்தவர்ஷிணி ராகத்தை நினைத்து விட்டான். அதனால் அவன் மன தில் அரசகுமாரியை அடைய வேண்டும் என நினைத்த போதிலும் பயனில்லாமல் போயிற்று. மாறாக திடீரென இடியும் மின்னலும் தோன்றி மழை கொட்டலாயிற்று. மழையிலிருந்து தப்ப அங்கு கூடிய மக்கள் ஓட்டம் பிடித்தார்கள். அப்போதுதான் ராமப்பாவுக்குத் தான் தவறான ராகத்தை நினைத்தது தெரிந்தது. ஆனால் தெரிந்து என்ன பயன்? மழையோ விடாமல் பெய்து கொண்டே இருந்தது.

அப்போது திடீரென மின்னல் வெட்டி ஒரு பேரிடி மலைப் பகுதியில் விழுந்த சத்தம் கேட்டது. மறு நிமிடம் ராமப்பாவின் கையில் வீணைக்கு பதிலாக ஒரு பாம்பு தான் இருந்தது. அது கண்டு அவன் அலறி அதனைத் தூக்கி எறிந்தான். அது சீறியவாறே உயரக் கிளம்பி ஆகாயத்தில் சென்று மறைந்து விட்டது. தன் மகன் போட்ட கூச்சலைக் கேட்டு ராமப்பாவின் தந்தை சஞ்சீவி வாசலுக்கு ஓடி வந்தான். அவன் என்ன நடந்தது எனக் கேட்க ராமப்பாவும் எல்லாவற்றையும் விபரமாகக் கூறினான். அதைக் கேட்ட சஞ்சீவி "மகனே! நீ நம் தொழிலுக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டாய். இது உனக்கு நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுத் திருக்கிறது. வீண்ஆசைப்பட்டால் மக்கள் மத்தியில் அவமானப்படத்தான் வேண்டி வரும். சரி இப்போதே காட்டிற்குப் போய் வேறு நல்ல மரமாகப் பார்த்து அறுத்து எடுத்து வா: அதைக் கொண்டு வீணை செய்து அரசகுமாரிக்குக் கொண்டு போய்க் கொடு" என்றான். மரம் வெட்டிக் கொண்டு வர மலைக்குப் போன ராமப்பா அங்கு யட்சிணி வசித்து வந்த மரம் இடி விழுந்து கருகிப் போனதைக் கண்டான்.

அதன்பின் அவன் நல்ல மரமாகத் தேடி வெட்டி எடுத்து ஊருக்கு வந்தான். அவன் நல்லதொரு வீணை செய்து அதை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு போய் அரசகுமாரியிடம் கொடுத்து விட்டு ஊர் திரும்பினான். (முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்



57

"இந்த ஆசிரமத்திலேயே தங்கி, நீங்கள் அமைதியாகத் தவம் செய்துகொண்டு இருக்கலாம்;இங்கு நீரும், மலரும், காயும், கனியும் நிரம்ப உள்ளன; இது தவம் செய்யத் தக்க சூழ்நிலை உடையது. நதிகள் மூன்றும் சங்கமிக்கும் இடம் இது; அவை கங்கை, யமுனை, சர ஸ்வதி எனும் மூன்று நதிகளின் சங்கமம்" என்றார் முனிவர்.

"இது தவம் செய்யத்தக்க இடம்தான் என்றாலும், எம் நாடாகிய கோசலை நாட்டுக்கு ஒரு யோசனை தூரத்திலேயே இது உள்ளது. இங்கு இருப்பது அறிந்து மக்கள் தொக்கு வந்து தொல்லை தருவர்; அதனால், சேய்மையில் உள்ள சித்திரகூட மலைச் சாரலே தக்கது ஆகும்" என்று கூறி, அவர் கூற்றை மறுத்தான் இராமன்.

பரத்துவாசரிடை விடை பெற்று யமுனைக் கரையை அடைந்தனர்; அதனைக் கடத்தித் தர ஒரு குகன் அங்கே இல்லை; படகும் இல்லை; என் செய்வது? இலக்குவன் அங்கிருந்த மூங்கிற் கழிகளைக் கயிற்றால் பிணைத்துத் தெப்பம் அமைந்தான்; அவர்களை அமரச் செய் தான்; துடுப்புகள் தேவைப் படவில்லை. அவன் கைகளே துடுப்புகள் ஆயின, நீரைத் துடுப்புப் போலத் தள்ளி யமுனையைக் கடந்து அடுத்த கரை வந்து சேர்ந்தான். அந்தக் கரையைக் கடந்து சென்ற போது அவர்கள் கல்லும் முள்ளும் கலந்த பாலை நிலத்தைக் கடக்க நேரிட்டது. காலை வைத்து நடக்க முடியவில்லை. இராமன் ஆணைக்கு அஞ்சிப் பகலவனும் பால் நிலவைப் பொழிந்தான்; தணல் வீசும் இடங்கள் தண் பொழில்களாகக் குளிர்ந்தன. கற்கள் மலரென மென்மை பெற்றன. கூரிய பற்களை உடைய புலிகள் கொலைத் தொழிலை மறந்தன. அப்பாலை நிலத்தைக் கடந்து, சித்திரகூட மலையை அடைந்தனர்.

### சித்திரகூட மலை

சித்திரகூட மலை எழில் மிக்கதாய் விளங்கியது. மலையடி யில் ஏலக் கொடியும், பச்சிலை மரமும் தவழ்ந்தன; சாரல் பகுதியில் யானையும் மேக மும் வேறுபாடின்றிப் படர்ந்தன; மலை உச்சியில் வருடை மான் கதிரவனின் பச்சை நிறக்குதிரை போல் பாய்ந்தது; யானைகளை விழுங்கிய மலைப் பாம்புகளின் தோல்கள், மூங்கில்களில் சிக்கிக் கொடிச் சீலைகள் போல் காட்சி அளித்தன; சிங்கம் தாக்கிய யானைகளின் தந்தங்களிலிருந்து சிந்திய முத்துகள் சிதறிக் கிடந்தன.

பாறைகளில் வேங்கைப் பூக்கள் படர்ந்தன; சந்தனச் சோலைகள் சந்திரனைத் தொட்டுக்கொண்டு இருந்தன; கொடிச்சியர் கின்னர இசை கேட்டு மகிழ்ந்தனர்; வேடுவர் கவலைக் கிழங்கை அகழ்ந்து எடுத்தனர்; குரங்குகள் நீரைச் சொரிந்து விளையாடின; கான்யாற்றில் விண்மீனைப் போல மீன்கள் துள்ளி ஒளி செய்தன; அரம்பையர் அங்கிருந்த அருவிகளில் நீராடி ஆரவாரித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல்.
~ ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விலையேற்றத்துக்கான எதிர்ப்பை நாங்கள் செய்யாதிருப்போம்!

சர்வதேசத்தின் பார்வையில் அழகாபுரியாக இருந்த இலங்கை இப்போது பஞ்சத்தின் நாடாக, ஆளத்தெரியாதவர்களின் கூடமாக மாறிவிட்டது.

இதன்காரணமாக சில நாடுகள் இலங்கைக்குப் போக வேண்டாம் என்று தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேநேரம் சீனாவுடன் உறவை ஏற்படுத்தி இந்தியாவுக்கு உள்ளித் தைலம் வைக்க நினைத்த இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு இப்போது இந்திய புளியெண்ணெய் பூசுகிறது.

ஆம், தன்னை நம்பிய இலங்கையைச் சீனா அம்போ என்று கைவிட காலம் கனியும் வரை காத்திருந்த இந்தியா இப்போது இலங்கையைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

சுருங்கக்கூறின் தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை என்ற திருவாசக வரிகள் போல இந்தியா இலங்கையை ஆட்கொண்டுவிட்டது.

இனி, மீளா அடிமை உமக்கே ஆளாய்... என்பதாக இலங்கையின் நிலைமை இருக்கப் போகிறது என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

இவை ஒருபுறமிருக்க, தங்கத்தினது விலையும் டொலரினது பெறுமதியும் நாளுக்கு நாள் எகிறிக் கொள்கிறது.

இப்படியே நிலைமை போகுமாயின் ஒரு யு.எஸ் டொலரின் இலங்கைப் பெறுமதி ஆயிரம் ரூபாயைக் கடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது ஒட்டுமொத்த சிங்கள மக்களும் வீதியில் இறங்கி ஆளுந்தரப்புக்கு எதிராகக் கோசம் செய்யவில்லை என்பதையும் இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் உட்பட அத்தனை பொருட்களின் விலைகளும் உச்சமடைந்திருந்தபோதிலும் ஆளுந்தரப்புக்கு எதிராகச் சிங்கள மக்கள் கொதித்து எழமால் இருப்பதற்கான மூல காரணம் என்னவெனில்,

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிராகத் தாம் கோசம் போட்டால், அது கண்டு தமிழ் மக்கள் எள்ளி நகையாடுவர். கூடவே உலக நாடுகளும் கைகொட்டிச் சிரிக்கும்.

எனவேதான் அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்காமல் பொறுமை காக்க வேண்டுமெனச் சிங்கள மக்கள் நினைக்கின்றனர்.

எனினும் தொடர்ந்து அவர்களால் பொறுமை காக்க முடியாதென்பது சர்வநிச்சயம்.

இந்தநிலையில் விலையேற்றத்தைக் கண்டித்து தமிழ் மக்களாகிய நாம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தால், இந்த அரசாங்கத்தைத் தமிழ் மக்கள் எதிர்க்கின்றனர்.

எனவே அரசாங்கத்தை நாம் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்துருவாக்கம் தென் பகுதியில் பரவலாக ஏவப்படும்.

ஆகவே, யார் கொண்டு வந்தார்களோ அவர்களே அவர்களை வெளியேற்றட்டும்.

நாம் பொறுமையாக இருந்து பார்ப்பதுதான் புத்திசாலித்தனம்.

## தலைக்கவசம் அணியாததால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க பொறிமுறை

### யாழை சேர்ந்தவர் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை செலுத்துவதால் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்காக முன்மாதிரியான பொறிமுறையொன்றை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் வடிவமைத்துள்ளார்.

30 வருடங்களாக மோட்டார் வாகன திருத்துநராக இருக்கும் கொழும்புத்துறையைச் சேர்ந்த எட்வின் மொரிஸ் என்பவரே இந்த பொறிமுறையை வடிவமைத்துள்ளார்.

இதன்படி தலைக்கவசம் போடாமல் மோட்டார் வண்டியை இயக்க முடியாது. அதேவேளை தலைக்கவசத்தை போட்டாலும் தலைக்கவசத்தின் கொழுக்கிகளை மாட்டினால் மாத்திரமே மோட்டார் சைக்கிள் இயங்குமாறு அந்த பொறிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தலைக்கவசத்தின் கொழுக்கியை கழற்றும் போது மோட்டார் சைக்கிள் இயங்காதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொறிமுறையில் சில பின்னடைவுகள் காணப்பட்டாலும்கூட இவ்வாறான ஒரு முன்மாதிரியான முயற்சியை வரவேற்பது அவசியமாகும்.

அந்த வகையில் இந்த பொறிமுறையை வடிவமைத்த எட்வின் மொரிஸை கேட்ட போது. தலைக்கவசம் போடாமல் ஏற்படுகின்ற மோட்டார் வாகன விபத்துகளை தவிர்ப்பதற்காக இதனை உருவாக்க ஐந்து வருடங்களுக்கு மேலாக முயற்சி செய்ததாகவும் தற்போது இதனை வெற்றிகரமாக செய்ய முடிந்ததாகவும் தெரிவித்தார். (5-4-33-104)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் சபைத் தெரிவும் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, தலைவராக எம்.வித்தியானந்த நேசனும் செயலாளராக எம். ராஜவரோதயமும் பொருளாளராக ஏ.கபில நேசமும் உபதலைவர்களாக ரி.தயாபரன், ஆர்.செல்வகுணாளன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக மருத்துவர் எஸ்.விஜயமோகன், மெ.வேணாட் றமேஸ், எஸ்.வாசன், கே.ராஜா, எம்.ரவீந்திரன் மற்றும் கே.ரவிகாந் ஆகியோர் தெரிவு செய்யபட்டனர். (5-4)

## பகல்வேளை வீடு உடைத்து 7 பவுண் நகை திருட்டு

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி பகுதியில் அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பகல் வேளையில் வீட்டை உடைத்து 7 பவுண் தங்க நகை திருடிய சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் திருடப்பட்ட நகையையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-4-104)

## வீதியில் குவிக்கப்பட்ட கற்களால் பொதுமக்கள் சிரமம்

(கரணவாய்)

கரணவாய் தெற்கு ஜே/350 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வீதியில் புனரமைப்புக்காக குவிப்பட்டுள்ள கற்களால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஒருமாத காலமாக வீதி வேலைக்காக கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனை கவனத்தில் கொள்ளுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** நியூ஗்ரீன்ஸ்பிவிரிலிமிடெட், இரும்பு தொழிற்சாலை, தந்திரிமலை சந்தி (கயசிங்கபுர இராணுவ முகாம்), அழகாபுரி (அடப்பங்குளம்), இலுப்பைக்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம் 1 வது பண்ணை, முதலியார் குளம், நேரியகுளம், சின்னகுளம் நேரியகுளம், சின்னசிப்பிகுளம், தந்திரிமலை வீதி, துட்டுவாகை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

### மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

எனவே கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை வீதிகளில் நடமாடவிடாது வீடுகளில் கட்டி வைத்திருக்க வேண்டும்.

ஏப்ரல் 1 ஆம் திகதியில் இருந்து ஒரு வாரத்தின் பின் வீதியில் நடமாடித்திரியும் கால்நடைகள் கையகப்படுத்தப் படுவதுடன் மாநகர கட்டளைச் சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (4-5)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

பாட்டு முடியும் தருணம், நரேந்திரர் பாடினார்
பூரண ஞானமும் பூரண அன்பும்
பொருந்திய பரம தயாபரனைச்
சேருக, பரவச பேரின்ப ரசத்தில்
மூழ்குக நித்தியம் மூழ்குகவே சிந்தனை

குருதேவரின் சமாதி நிலையையும் பரவசப் பேரின்ப நிலையையும் என்றும் அழியா சித்திரங்களாக உள்ளத்தில் தாங்கியவராக ம- வீடு திரும்பினார். இதயத்தை இளக்கி இனிமை பொழியும் அந்தப் பாடல் வரிகள் அவரது இதயத்தில் எதிரொலித்தன.

'பேரின்ப ரசத்தில் மூழ்குக நித்தியம் மூழ்குகவே' என்ற வரிகள் மீண்டும் மீண்டும் அவரது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 31

### மாத்தறை மாவட்டத்தின் மாகாண சபைத்தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திற்கு 17 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி மாத்தறை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திற்கு 17 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். இதன்படி மாத்தறை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது**

மாத்தறை மாவட்டத்தில் 16 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 650 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 814,048 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,450 ஆக நிர்ணயிக் கப்பட்டிருந்தது.

**மாத்தறை மாவட்டத்தில் 16 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 650 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 814,048 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,450 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

மாத்தறை மாவட்ட செயலகத்தில் 08.12.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 04 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 07 சமர்ப்பிப்புகளை குழு பெற்றுக் கொண்டது.

அதிகளவான பிரேரணைகளில் பரிந்துரைக் கப்பட்டிருந்ததாவது, தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு அல்லது பிரதேச செயலகப் பகுதிகளின் ஒருங்கிணைப்பு, உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே ஆகும்.

மேலும் பரிந்துரைக்கப்பட்டவற்றில் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச் சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத் தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகள் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) போன்ற வற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல் களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதேநேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி சனத்தொகையின் விலகலின் வரம்புகளுக் குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டுள்ளது.

ஒரு பிரேரணை பரிந்துரைத்ததாவது பழைய வெலிகம பாராளுமன்ற தேர்தல் தொகுதிக்கு ஒரு பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதி வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான் மையின் சமூக விருப்பங்களை பிரதிநிதித்துவப் படுத்துவதை உறுதி செய்வதற்காகவே. ஆனால் குழு அவதானித்ததாவது முழு மாவட்ட சனத் தொகையிலும் அதிகளவு உள்ள சிறுபான்மை (முஸ்லிம்கள்) 25,614 (3.2%) என்பதே ஆகும். அது ஒரு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிக்குத் தேவையான சனத்தொகையில் 16% ஐ விட குறைவானதேயாகும். எனவே அந்த சமூகத்தின் சனத்தொகை சிறியதாக உள்ளதால் ஒரு பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதியில் சிறுபான்மை யின் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுவது சாத்தியமற்றது என்பதை குழு அடையாளம் கண்டுகொண்டது.

அதற்குப் பதிலாக முஸ்லிம் சமூகத்தை ஒரு தேர்தல் தொகுதிக்குள் ஒன்றுதிரட்டி இந்தப் பிரேரணைகளை முடிந்த அளவு அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையிலும், அத்துடன் அனைத்து இனத்தவர்களி னதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக் கின்ற வகையிலும் எல்லைகள் நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு சமர்ப்பிப்பு பரிந்துரை செய்ததாவது குறைந்த பட்சம் தென் மாகாண சபையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியாவது இருக்க வேண்டும் என்பதே ஆகும். முஸ்லிம்களை தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கும் ஒரு காரணியாக மாற்றுவதற்காக வெலிகாமத்தின் கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளில் கவனம் செலுத்தி அப் பிரேரணை முன்மொழியப்பட்டது. குழுவானது முடியுமான வகையில் குறிப்பிட்ட தொகுதிகளில் அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் தொகுதிகள் எல்லை நிர்ண யம் செய்யத் தீர்மானித்தது.

பாராளுமன்றத் தேர்தல் தொகுதி சம்பந்தமான ஒரு சமர்ப்பிப்புக்கு குழுவினால் எவ்வித நடவ டிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனெனில் அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமைய வில்லை.

சுருக்கமாகக் கூறினால் 9 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகு திகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −3.7% மற்றும் + 4.2% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப்பிரதிநிதித் துவத்தை பாதுகாத்து மாத்தறை மாவட்டம் 9 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அதாவது தெனியாய (57), பஸ்கொட (73), ஹக்மன (94), அக்குரெஸ்ஸ (77), மாலிம்பட (70), கம்புறுபிட்டிய (91), தெவிநுவர (78), மாத்தறை (50), வெலிகம (60) தொகுதிகள் ஆகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக் கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

விபரம் அட்டவணை (J2) இல் காட்டப்பட்டுள் ளது.

**அட்டவணை (J2)-மாத்தறை மாவட்ட தேர்தல் தொகுதிகளும் சனத்தொகையும்**

| தேர்தல் தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தெனியாய | 74621 | 15114 | 132 | 17 | 89884 |
| பஸ்கொட | 92571 | 1667 | 14 | 7 | 94259 |
| ஹக்மன | 85342 | 386 | 1520 | 6 | 87254 |
| அக்குரெஸ்ஸ | 85151 | 2716 | 1737 | 16 | 89620 |
| மாலிம்பட | 83044 | 173 | 3823 | 39 | 87079 |
| கம்புறுபிட்டிய | 89821 | 91 | 20 | 24 | 89956 |
| தெவிநுவர | 88995 | 194 | 3386 | 23 | 92598 |
| மாத்தறை | 88611 | 303 | 4293 | 135 | 93342 |
| வெலிகம | 79424 | 255 | 10329 | 48 | 90056 |
| மொத்தம் | 767580 | 20899 | 25254 | 315 | 814048 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## 10 மணி...

மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 6 மணித்தியாலங்களும் மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணிவரையான காலப்பகுதியினுள் 4 மணித்தியாலமும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேபோல P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 6 மணித்தியாலங்களும் மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரையான காலப்பகுதியினுள் 4 மணித்தியாலங்களும் மின்வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## 2 இலட்சத்தை...

விடப்பட்டதால் டொலரின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனால் இலங்கையில் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று 2 இலட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டது. (ம)

## கோப்பாய்...

நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த சென்ற கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள், இருவரையும் கைது செய்ய முயன்றபோது, அங்கு நின்ற கும்பல் ஒன்று இரு பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அதனை அடுத்து அங்கிருந்து விலகி இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ் நிலையம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். (ம-33)

## கோப்பாயில்...

படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்த 30 வயது மற்றும் 26 வயதான இருவர் மீது இரும்பு கம்பிகளால் தாக்கி வாளினால் வெட்டி படுகாயம் ஏற்படுத்திவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

குறித்த தாக்குதலின் பின்னர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், வீட்டினை சுற்றி முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின்போது, வீட்டினுள் இருந்து 03 வாள்களை மீட்டுள்ளனர்.

குறித்த வாள்கள், வீட்டில் இருந்தவர்களுடையதா? அல்லது தாக்குதலாளிகள் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு அவற்றை கைவிட்டு சென்றுள்ளனரா? என விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-33,104)

## தமிழர்...

தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை விமர்சித்து இலங்கையின் பிரதான சிங்கள தொலைக்காட்சியின் அறிவிப்பாளர் ஒருவர் இனவாத கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்றது. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வுகளைப் பற்றிப் பேசுகிறது. தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மீதான தடையை நீக்கக் கோருகிறது. இவை சரியா? என அறிவிப்பாளர் ரணிலிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு "தடை செய்யப்பட்ட அமைப்புகள் என்றால் என்ன?" என ரணில் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு பதிலளித்த அறிவிப்பாளர், விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி செய்ததாக கூறப்படும் அமைப்புகள் என குறிப்பிட்டுள்ளார்.

"உண்மையில், அந்த அமைப்புகளில் பல தடை செய்யப்படவில்லை. எங்கள் காலத்திலும் தடை நீக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பிறகு இதற்கு தடை விதிக்கப்பட்டது. அந்த தடைகளை நீக்க வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது.

இப்போது குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது அவர்கள் அல்ல நீங்கள் தான். இந்த நாட்டில் ஏதாவது பிரச்சினை ஏற்படும்போது நாம் மீண்டும் இனவாதத்தினை தூண்டுகின்றோம். அது பழைய கதை" என அவர் கூறியுள்ளார். (ம)

## தேசிய...

இந்தளவு நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்நிலையில் மீண்டுமொரு தேசிய அரசு எதற்கு? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார் கோட்டாபய ராஜபக்ச.

எமது அரசு பெரும்பான்மைப் பலத்துடன் இன்னமும் இருக்கின்றது. அரசைக் கவிழ்க்க சதி செய்வோர் தொடர்பில் நாம் கவனம் எடுத்துள்ளோம். அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை விரைவில் முடிவுக்கு வரும் என்று உறுதி வழங்கியுள்ளார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச. (ம)

## அத்துமீறிய...

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைதுசெய்தனர். (ம-33,104)

## எரிவாயுவின்...

போதே நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் "லிட்ரோவின் எரிவாயு விலை தொடர்ந்து உயருமா?" என கேட்டதற்கு அமைச்சர் "கட்டாயமாக எரிவாயு விலை அதிகரிக்கும்." என பதிலளித்துள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் 4ஆம், 5ஆம் திகதிக்குள் எரிவாயு தட்டுப்பாடு நீங்கும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.(ம)

## ஜனாதிபதியை...

வாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிய எதிர்க்கட்சி குழுவை உருவாக்கி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மையை இழக்கச் செய்வதே தமது நோக்கம் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ம)

## அரசா...

இதன்படி ஏப்ரல் 07 ஆம் திகதி தேர்தல் தொகுதிகள் வாரியாக குறித்த போராட்டங்கள்முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இப்போராட்டங்களில் பங்கேற்று, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் பேரணி ... கண்டியில் இடம்பெறவுள்ளது.

அதன்பின்னர் ஜூன் 30 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் பிக்குகள் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. டிசம்பர் மாதம் கட்சியின் தேசிய மாநாடு இடம்பெறவுள்ளது. (ம)

# உரும்பிராயில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியவர் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து நாடு திரும்பி, யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வசித்து வந்த நபரே இவ்வாறு கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டில் பூச்சாடியில் கஞ்சா செடி வளர்ப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், குறித்த நபரின் வீட்டினை நேற்றைய தினம் சுற்றிவளைத்த பொலிஸார், அவரை கைது செய்ததுடன், வீட்டில் வளர்த்த கஞ்சா செடியினை சான்றுபொருளாக மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம -104)

மெகா பவர்
திகதி 29/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1069
Z 23 02 18 27 38

மஹஜன சம்பத
திகதி 2022/03/29
சீட்டிழுப்பு இலக்கம் 4721
L 0 3 0 5 5 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.03.29
சீட்டிழுப்பு இலக்கம் - 751
A 06 20 60 80

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1524
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.29
ரூ. 4,990,200/-
03 24 36 68 H
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.29
சீட்டிழுப்பு இல: 3859
வர்ணம்: இளநீலம்
ரூ.5,397,340/-
வெற்றி இலக்கங்கள்
14 40 42 70 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1698
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 29
தினம் செவ்வாய்
L 02 31 57 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 55,259,306/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 153
சீட்டிழுப்பு திகதி 29.03.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
18 22 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,966,060/-

ராசி
திகதி 2022-03-29
சீட்டிழுப்பு வாரம் 3410
வர்ணம் சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி இலக்கங்கள்
25 37 47 52
3619 848
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,077,980/-

12 
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 32 21 28 35 49
சீட்டிழுப்பு வாரம் 874
2022.03.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 227,118,571/-
தொலை பேசி : 011-2 333 546-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

மறவன்புலோ வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த **தம்பிஐயா ரகுகுமார் (197801903360)** ஆகிய எனது தேசிய அடையாள அட்டை யாழ். நகருக்கு அண்மையாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (10830)

**077 087 0827**



## வேலையாள் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் வேலையாள் தேவை.

**தங்குமிடம், உணவு இலவசம்**
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம். (10834)

தொ.இல:-
**077 386 6250**


# மயங்கி விழுந்ததில் காயம்

சாவகச்சேரியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மண்ணெண்ணெய் வாங்க நின்ற நபர் ஒருவர் மயங்கி விழுந்து தலையில் காயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபர் ஒருவரே இவ்வாறு எரிபொருள்நிரப்பு நிலையத்தில் மயங்கி விழுந்து காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

(C-4072)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். **V2 TRAVELS**

**0777-068-777**



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10821)

**076 825 7716** (ஆகாஸ்)



## JOB VACANCY

Inner Circle

எங்கள் வளர்ந்துவரும் வணிகக் குழுவில் சேர நீங்கள் தயாரா?

TELEMARKETER & BIKE RIDER?

- ❖ Trainings
- ❖ Recognition
- ❖ Rewards
- ❖ Secondary Education
- ❖ Good Salary Package (குறைந்தது 45,000/=)

(10834)

தகைமை : O/L, A/L
வயது : 18 - 28
Jaffna, Vavuniya, Kilinochchi, Mannar

**Inner Cricle (pvt)Ltd**
**No.100/3, Manipay Road, Jaffna.**
**077 782 4807**



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

02.04.2022

வங்கியியல் கற்கைநெறிகள்
**BANKING COURSES**
IABF & DABF

கணக்காளர் கற்கை நெறிகள்
CHARTERED ACCOUNTING COURSES
Business Level - i, ii

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** ( Sri Lanka)
(AA1, AA2, AA3)

G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

**CERTIFICATE COURSE IN ENGLISH**

Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

(C-4087)

021 222 3382, 021 222 9149, 077 440 5917



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 90 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- ◆ சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- ◆ A32 பிரதான வீதியில் இருந்து 50 m நடைதூரம்.
- ◆ A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- ◆ 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ◆ நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 340 தென்னைகள் உள்ளன.

(10832)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம் -
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை **ரூ. 450,000**

**ஜெயம் - 077 814 7389, 077 241 7589**



## யப்பான் சைக்கிள்

அறிவுள்ளோரின் தெரிவு



1. லேடீஸ் சைக்கிள்கள்
2. யென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்

இலகுவான ஓட்டம்.
பாட்ஸ் தாராளமாக உண்டு.
வருடா வருடம் கழுவிப் பூட்டுதல்.
திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

(C-4094)

**யப்பான் சைக்கிள் B பசார்**
கந்தரோடை றோட், T.P-**078 615 5929**
சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில்
**100 பரப்புக் காணி விற்பனைக்கு**
(நிலப்பரப்பு)

- ◆ மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- ◆ இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ◆ யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இருந்து 200m தூரத்தில்.
- ◆ நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- ◆ சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- ◆ நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- ◆ அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)




(10831)

ஒரு பரப்பின் விலை -
**3 இலட்சத்து 50 ஆயிரம் மட்டும்**
**(350,000)**

**074 291 3725, 074 291 3726, 074 291 3727**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.